
**செப்டம்பர் – 04**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## குறைந்தபட்ச ஆதரவு விலையால் தமிழ்நாடு பருத்தி விவசாயிகளுக்கு ஆதாயம்




- ❖ இந்தியப் பருத்திக் கழகத்தின் (CCI) குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) சார்ந்த நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் பருத்தி விவசாயிகள் பயனடைவதில்லை.
- ❖ 2021 ஆம் ஆண்டு முதல், விலைகள் குறைந்தபட்ச ஆதரவு விலையை விடக் குறையும் போது CCI தமிழக விவசாயிகளிடமிருந்து பருத்தியையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற உத்தரவு இருந்த போதிலும் CCI அவ்வாறு செய்யவில்லை.
- ❖ தமிழ்நாட்டில் பருத்திச் சாகுபடியானது 19 மாவட்டங்களில் சுமார் 70,000 ஹெக்டேர் பரப்பளவில் பரவியிருந்தாலும், பருத்தி விதை நீக்கும் தொழிற்சாலைகள் 100 முதல் 200 கி.மீ தொலைவில் அமைந்துள்ளன.
- ❖ கொள்முதல் மையத்தை அமைப்பதற்கு, ஒரு தாலுக்காவில் குறைந்தபட்சம் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடியும் 20 கிலோ மீட்டருக்குள் ஒரு விதை நீக்கும் தொழிற்சாலை இருக்க வேண்டும் என்று CCI கொள்முதல் விதிகள் கூறுகின்றது.
- ❖ தமிழ்நாட்டில் விதை நீக்கும் தொழிற்சாலைகளுக்கான போக்குவரத்துச் செலவுகள் குவிண்டாலுக்கு சுமார் 500 ரூபாய் ஆகும், ஆனால் விதை நீக்கும் செயல்பாடுகள் போக்குவரத்துச் செலவினங்களை ஈடு கட்டுவதில்லை.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, விவசாயிகளுக்கானப் போக்குவரத்துச் செலவினங்களை ஈடுகட்ட உதவுகிறது என்பதோடு, மேலும் பருத்தி விவசாயிகளுக்கு உதவுவதற்காக தமிழ்நாட்டிற்கும் இதே போன்ற ஆதரவு பரிந்துரைக்கப்படுகிறது.

## கடலடி தொல்பொருள் ஆய்வு

- ❖ தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத நடுப்பகுதியில் பூம்புகார்-நாகப்பட்டினம் கடற்கரையில் கடலடி ஆய்வினைத் தொடங்க உள்ளது.
- ❖ நீரில் மூழ்கிக் காணப்படும் எஞ்சிய பாகங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டின் கடல்சார் வரலாற்றை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.
- ❖ இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகம், தேசியக் கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம்

மற்றும் தேசியக் கடலியல் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் நிபுணர்கள் இந்த ஆய்வில் உதவுவார்கள்.

- 1980 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் நடைபெற்ற முந்தைய ஆய்வுகள் இப்பகுதியில் கடலடி கட்டமைப்புகள் மற்றும் கப்பல் மூழ்கு விபத்துக்கள் ஏற்பட்டு உள்ளதை வெளிப்படுத்தின.




## பொறுப்பு காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம்

- மூத்த இந்தியக் காவல் பணி அதிகாரி G. வெங்கட்ராமன் தமிழகத்திற்கான பொறுப்பு காவல்துறை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- சங்கர் ஜிவாலுக்கு அடுத்தப்படியாக, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று அவர் பதவியேற்றார்.
- ஒரு வழக்கமான காவல்துறை தலைமை இயக்குநர் நியமிக்கப்படும் வரை அவர் இப்பதவியில் இருப்பார்.
- ஒரு வழக்கமான காவல்துறை தலைமை இயக்குநர் நியமனம் ஆனது, 2018 ஆம் ஆண்டு பிரகாஷ் சிங் வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களைப் பின்பற்றும்.
- தமிழ்நாடு அரசு எட்டு காவல்துறை தலைமை இயக்குநர் பதவிக்கான தகுதியுள்ள அதிகாரிகளின் பட்டியலை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பியுள்ளது.
- முதல் மூன்று பெயர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் பட்டியலிடப் பட்டு இறுதி நியமனத்திற்காக மாநில அரசிடம் திருப்பி அனுப்பப்படும்.
- சமீபத்திய ஆண்டுகளில் காவல்துறை தலைமை இயக்குநரை நியமிப்பது தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பை தமிழ்நாடு உடனடியாகப் பின்பற்றாதது இதுவே முதல் முறையாகும்.
- 2018 ஆம் ஆண்டில், பிரகாஷ் சிங் வழக்கைத் தொடர்ந்து K. இராமானுஜம் நிலையான இரண்டு ஆண்டு பதவிக் காலத்துடன் பதவியில் நியமிக்கப்பட்டார்.
- புதிய காவல்துறை தலைமை இயக்குநருக்கான முன்மொழிவை UPSC ஆணையத்திற்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் தற்போதைய தற்காலிக

நியமனத்திற்கு காரணமாக அமைந்தது.





## இந்திய ஈட்டி மரங்கள்

- தமிழ்நாடு அரசானது, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குப் பிறகு 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஈட்டி மரங்கள் (பாதுகாப்பு) சட்டத்தினைப் புதுப்பிக்கவில்லை.
- இந்திய ஈட்டி மரங்கள் ஆனது (டால்பெர்ஜியா லாடிஃபோலியா) தமிழ்நாட்டின் நீலகிரி, ஆனைமலை மற்றும் பரம்பிக்குளம் மலைத்தொடர்களில் காணப்படுகின்றது.
- இந்தியாவின் வாழ்விடங்களில் இந்திய ஈட்டி மரங்களுக்கு ஏற்றவாறு 17.2% பகுதிகள் மட்டுமே பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குள் உள்ளது.
- ஈட்டி மரங்கள் நைட்ரஜன் நிலைப்படுத்தல் மூலம் மண் வளத்தை மேம்படுத்துகின்றன.
- அவை பறவை மற்றும் பூச்சிகளின் பல் வகைமையினை ஆதரிப்பதோடு, நீண்டகால கார்பன் உறிஞ்சு பகுதிகளாகவும் செயல்படுகின்றன.
- 2019 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான சமீபத்திய கள ஆய்வுகள், தமிழ்நாட்டில் 0.1 ஹெக்டேருக்கு 2.85 ஈட்டி மரங்கள் இருப்பதாகக் காட்டுகின்றன.
- கர்நாடகா மற்றும் கேரளாவில் 0.1 ஹெக்டேருக்கு 6.19 மற்றும் 5.38 மரங்கள் என அதிக மரங்களின் பரவல் அடர்த்தி பதிவாகியுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள ஈட்டி மரங்களின் எண்ணிக்கையில் இயற்கையான மீளுருவாக்கம் இல்லாமல் முதிர்ந்த, பல ஆண்டுகள் ஆன மரங்கள் அதிகம் காணப் படுகின்றன.
- தமிழ்நாட்டின் பல பகுதிகளில் ஈட்டி மரக் கன்றுகள் அரிதானவையாகவும் அல்லது இல்லாமலும் உள்ளன.
- பாதுகாப்புச் சட்டமானது, 2025 ஆம் ஆண்டில் காலாவதியாகும் வரை அரசாங்க அனுமதியின்றி ஈட்டி மரங்களை வெட்டுவதைத் தடைசெய்தது.
- குறிப்பாக நீலகிரி தேயிலைத் தோட்டங்களில் காணப்படும் தனியார் ஈட்டி மரங்கள், சட்டப் பாதுகாப்பு இல்லாமல் ஆபத்தில் உள்ளன.
- அவற்றின் வாழ்விட மாதிரியாக்கம் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல் மற்றும் தேனி ஆகியவை ஈட்டி மரங்களுக்கான முக்கிய மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- அருகி வரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) சர்வதேச வர்த்தகம்

குறித்த மாநாட்டின் இரண்டாவது பின் இணைப்பின் கீழ் இந்திய ஈட்டி மரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.

- இந்த இனமானது, 2018 ஆம் ஆண்டு முதல் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தினால் (IUCN) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாக வகைப்படுத்தப் பட்டு உள்ளது.
- 2011-12 ஆம் ஆண்டில் இந்தியாவின் கடைசி தேசிய மதிப்பீட்டில் இந்திய ஈட்டி மரங்கள் அச்சுறுத்தலுக்கு அண்மையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.




## தரங்கம்பாடி டேனியக் கோட்டை

- தரங்கம்பாடியில் உள்ள டேனியக் கோட்டை 1620 ஆம் ஆண்டு டேனிய பிரபு ஓவ் ஜெட் என்பவரால் கட்டப்பட்டது.
- இந்தக் கோட்டையானது 36,410 சதுர அடி பரப்பளவைக் கொண்டது மற்றும் 400 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமையானது.
- டேனியக் குடியேறிகளுக்கு ஒரு தளமாகப் பயன்படுத்தப்பட்ட இந்தக் கோட்டையானது இந்தியாவில் டென்மார்க்கின் காலனித்துவ இருப்பின் அடையாளமாகும்.
- தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது, இந்தக் கோட்டையின் மறுசீரமைப்பிற்காக 3.63 கோடி ரூபாய் ஒதுக்கியது.
- இந்தக் கோட்டையின் மறுசீரமைப்பு பணிகள் ஆனது, 2023 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதியன்று தொடங்கியது.
- தரங்கம்பாடியில் உள்ள ஆளுநரின் மாளிகை 1793 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.
- டேனிய ஆளுநர்களால் பயன்படுத்தப்பட்ட இது, பின்னர் 1845 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டது.
- இந்த இரண்டு மாடி கொண்ட மாளிகை 10,220 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இந்த மாளிகை அதன் உயரமான தூண்கள், மைய முற்றம் மற்றும் பிரமாண்டமான அரங்குகளுக்கு பெயர் பெற்றது.
- ஆளுநரின் மாளிகையினை மறுசீரமைக்க மொத்தம் 4.33 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது.

- மறுசீரமைப்புப் பணிகள் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## தமிழ்நாட்டில் நீலக் கொடி சான்றிதழ் விரிவாக்கம்




- தமிழக சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத் துறையானது நீலக் கொடி சான்றிதழுக்காக ஆறு கடற்கரைகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்கரைகளில் சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள திருவான்மியூர், பாலவாக்கம் மற்றும் உத்தண்டி ஆகியவை அடங்கும்.
- தூத்துக்குடியில் உள்ள குலசேகரப்பட்டினம் கடற்கரை, விழுப்புரத்தில் உள்ள கீழ்புதுப்பட்டு கடற்கரை மற்றும் கடலூரில் உள்ள சாமியார்பேட்டை கடற்கரை ஆகியவையும் சேர்க்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு கடற்கரையும் மேம்படுத்துவதற்கு 4 கோடி ரூபாய் என மொத்தம் 24 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

- தமிழ்நாடு நிலையான கடல் வளங்கள் மற்றும் கடல்சார்/நீலப் பொருளாதாரம் (TN-SHORE) திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது.
- நீலக் கொடி சான்றிதழ் பெற 33 சர்வதேச அளவுருக்களுக்கு இணங்க வேண்டும்.
- இந்த அளவுருக்கள் ஆனது கடல் நீரின் தரம், சுற்றுச்சூழல் கல்வி, பாதுகாப்பு, சுற்றுலா வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கியது.
- மெரினா கடற்கரை, சில்வர் பீச், காமேஸ்வரம் கடற்கரை மற்றும் அரியமான் கடற்கரை ஆகியவை முன்னர் தமிழ்நாடு மாநிலக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டன.
- செங்கல்பட்டில் உள்ள கோவளம் கடற்கரையானது, 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாட்டின் முதல் நீலக் கொடி சான்றிதழ் பெற்ற கடற்கரையாகும்.

# தேசியச் செய்திகள்

## NDMA ஆணையத்திற்கு உறுப்பினர்கள் பரிந்துரை




- பிரதமர் இரண்டு புதிய உறுப்பினர்களைப் பரிந்துரைத்து, ஏற்கனவே உள்ள மூன்று உறுப்பினர்களை தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு (NDMA) மீண்டும் பரிந்துரைத்தார்.
- அறிவியலாளர் தினேஷ் குமார் அஸ்வால் மற்றும் பேரிடர் மீட்பு நிபுணர் ரீட்டா மிஸ்ஸல் ஆகியோர் NDMA ஆணையத்தின் புதிய உறுப்பினர்களாக பரிந்துரைக்கப் பட்டனர்.
- இராஜேந்திர சிங், கிருஷ்ண ஸ்வரூப் வட்சா மற்றும் துணை நிலை ஆளுநர் சையத் அட்டா ஹஸ்னைன் (பணி ஓய்வு) ஆகியோர் மேலும் மூன்று ஆண்டு காலத்திற்கு மீண்டும் பரிந்துரைக்கப்பட்டனர்.
- இந்த நியமனங்கள் 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் 3(2)(b)வது பிரிவின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு அல்லது மறு உத்தரவு வரும் வரை மேற்கொள்ளப்படுகின்றன.
- இந்தியாவில் பேரிடர் மேலாண்மைக்கான உச்ச அமைப்பான NDMA ஆணையத்தின் தலைவராகப் பிரதமர் செயல்படுகிறார்.
- பேரிடர் தடுப்பு, தணிப்பு, தயார்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பதற்கு NDMA பொறுப்பு கொண்டுள்ளது.

## டிஜிட்டல் இணைப்பு மதிப்பீட்டு முகமைகள்




- ❖ இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது எட்டு நிறுவனங்களை எண்ணிம/டிஜிட்டல் தகவல் தொடர்பு இணைப்பு மதிப்பீட்டு முகமைகளாக (DCRAs) பதிவு செய்துள்ளது.
- ❖ இது 2024 ஆம் ஆண்டு டிஜிட்டல் இணைப்பு விதிமுறைகளுக்கான கட்டமைப்புகளின் மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ இந்தப் பதிவுகள் ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று வழங்கப்பட்டன என்ற நிலையில் இது அதன் விதிமுறைகளுக்கு இணங்க, மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.
- ❖ பதிவு செய்யப்பட்ட எட்டு DCRA நிறுவனங்களில் Ardom Towergen, Crest Digitel, CTL Infocom, ESTEX Telecom, Frog Cellsat, Phistream Consulting, Shaurrya Teleservices மற்றும் TUV SUD South Asia ஆகியவை அடங்கும்.
- ❖ இந்த நிறுவனங்கள் கட்டிடங்களில் உள்ள டிஜிட்டல் உள்கட்டமைப்பை மதிப்பிடும் மற்றும் TRAI ஆணையத்தினால் வெளியிடப்பட்ட தரப்படுத்தப்பட்ட முறையின் அடிப்படையில் நட்சத்திர மதிப்பீடுகளை வழங்கும்.
- ❖ இந்த மதிப்பீடுகள் ஆனது ஒளியிழைகள் தயார்நிலை, கைபேசி மற்றும் Wi-Fi பரவல், பிராட்பேண்ட் சேவையின் வேகம் மற்றும் ஒட்டுமொத்த டிஜிட்டல் பயனர் அனுபவம் போன்ற அளவுருக்களின் அடிப்படையில் அமையும்.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச குற்றவியல் துறையின் முதல் ஊதா அறிக்கை

- ❖ அமலாக்க இயக்குநரகம் (ED) ஆனது சர்வதேச குற்றவியல் காவல் அமைப்பிலிருந்து (இன்டர்போல்) அதன் முதல் ஊதா அறிக்கையினைப் பெற்றுள்ளது.
- ❖ உலக நாடுகளில் செயல்படும் புதிதாக அடையாளம் காணப்பட்ட, வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) வலையமைப்பு குறித்து 196 உறுப்பினர் நாடுகளுக்கு ஊதா அறிக்கை எச்சரிக்கை விடுக்கிறது.
- ❖ சட்டவிரோத நிதிகளை இடம் மாற்ற போலி/ஷெல் நிறுவனங்கள் எவ்வாறு போலி வர்த்தக ஆவணங்கள், விலைப் பட்டியல் இல்லாத இறக்குமதிகள் மற்றும் சுழற்சி முறையிலான மறு ஏற்றுமதிகளைப் பயன்படுத்தின என்பதை இந்த அறிக்கை விவரிக்கிறது.

- ஊதா அறிக்கையானது, உலகளாவிய நிறுவனங்கள் மறைமுக முறைகள் குறித்த உளவுத் துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது மற்றும் ARIN-AP மற்றும் குளோப் நெட்வொர்க் போன்ற வலையமைப்புகள் மூலம் ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் வன உரிமைகள்

- Securing Rights, Enabling Futures: Policy Lessons from Forest Rights Act and Future Pathways என்ற தலைப்பிலான இந்த 2025 ஆம் ஆண்டு அறிக்கையானது, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான அறக்கட்டளையுடன் இணைந்து UNDP இந்திய அமைப்பினால் வெளியிடப் பட்டது.
- 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வன உரிமைகள் சட்டம் (FRA) ஆனது, இந்தியாவில் உள்ள வனப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினச் சமூகங்களின் உரிமைகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆய்வு ஆனது ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிரா போன்ற குறிப்பிடத்தக்க பழங்குடியின மக்கள்தொகை கொண்ட மூன்று இந்திய மாநிலங்களில் கவனம் செலுத்துகிறது.
- 2019 ஆம் ஆண்டு பருவநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழுவினால் (IPCC) குறிப்பிட்டது படி, உலகளவில், சமூக நில உரிமைகள் ஆனது மேம்பட்ட வன நிர்வாகம், பருவநிலை நெகிழ்திறன் மற்றும் கார்பன் குறைப்பு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி நிலவரப்படி, 25,11,375 உரிமைகள் FRA சட்டத்தின் கீழ் வழங்கப் பட்டுள்ளன என்பதோடு இதில் 23.2 மில்லியன் ஏக்கர் வன நிலம் அடங்கும்.
- இதில் தனிநபரின் கீழ் 5.07 மில்லியன் ஏக்கர் மற்றும் சமூக உரிமைகளின் கீழ் 18.19 மில்லியன் ஏக்கர் அடங்கும்.
- பழங்குடியின விவகார அமைச்சகம் (MoTA) ஆனது தார்தி ஆபா ஜன்ஜாதியா கிராம் உத்கர்ஷ் அபியான் (DA-JGUA) திட்டத்தின் கீழ் பயிற்சி, கண்காணிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் FRA செயல்படுத்தலை ஆதரிக்கிறது.

❖ ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) ஆனது FRA செயல்படுத்தலை ஆதரிக்கவும், அதனை மேம்பாட்டுத் திட்டங்களுடன் ஒன்றிணைக்கவும் MoTA மற்றும் ஆறு மாநில அரசாங்கங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.




## வாகிடா இனத்தின் அழிவு




❖ மெக்சிகோவின் மோசமான சட்ட அமலாக்கம் ஆனது, வாகிடா போர்போயிஸின் உடனடி அழிவுக்கு (உலகளவில் 10 மட்டுமே எஞ்சியுள்ளதுடன்) வழிவகுத்தது.

❖ கலிபோர்னியா வளைகுடாவில் டோட்டோபா மீன்களை குறிவைத்து மேற்கொள்ளப் படும் சட்டவிரோத கில்நெட் மீன்பிடித்தலில், வாகிடாக்கள் தற்செயலாக சிக்குவதால் அது இந்த இனங்களுக்கு முக்கிய அச்சுறுத்தலாக உள்ளது.

❖ 2020 ஆம் ஆண்டு முதல் இந்த மீன்பிடி கருவிகளுக்குத் தடை விதிக்கப்பட்ட போதிலும், மீன்பிடி நடவடிக்கைகள் முந்தைய நிலைகளிலேயே தொடர்வது மட்டுமல்லாமல்


மெக்சிகோவில் சட்ட அமலாக்கம் பலவீனமாகவே உள்ளது.

- வாகிடா போர்போயிஸ் (ஸ்பானிய மொழியில் சிறிய பசு எனப்படும்) 1958 ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகவும் அருகி வரும் கடல் வாழ் பாலூட்டி ஆகும்.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மாநில எரிசக்தி திறன் குறியீடு 2024

- எரிசக்தி திறன் வாரியம் (BEE) ஆனது, ஆற்றல் திறன் கொண்ட பொருளாதாரத்திற்கான கூட்டணியுடன் (AEEE) இணைந்து 2024 ஆம் ஆண்டு ஆற்றல் திறன் குறியீட்டை (SEEI) வெளியிட்டது.
- இந்தக் குறியீடு ஆனது 2023–24 ஆம் நிதியாண்டிற்கான 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் ஆற்றல்சார் செயல்திறனை மதிப்பிடுகிறது.
- மொத்த ஆற்றல் நுகர்வு (MToE) சார்ந்து மாநிலங்கள் தொகுக்கப்பட்டு, முன்னணி, சாதனை படைத்தவை, போட்டி வாய்ந்தவை மற்றும் இலட்சியமிக்கவை என்ற நான்கு பிரிவுகளின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- அந்தந்த குழுக்களில் சிறந்த செயல்திறன் கொண்டவை மகாராஷ்டிரா (>15 MToE), ஆந்திரப் பிரதேசம் (5–15 MToE), அசாம் (1–5 MToE) மற்றும் திரிபுரா (<1 MToE) ஆகியனவாகும்.
- SEEI 2024 ஆனது தரவு சார்ந்த கொள்கை, மாநிலங்களுக்கு இடையேயான கற்றல் மற்றும் 2070 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் நிகரச் சுழி உமிழ்வு நிலையை அடைதல் இலக்கு ஆகியவற்றினை ஆதரிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★